தமிழ் இணையக் கல்விக் கழகம்
932
21 JUL 2016
TAMIL VIRTUAL ACADEMY

**சுருக்கம்**

தமிழ் வளர்ச்சி – தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தமிழ் சார்ந்து வெளியிட்டுள்ள பல்வேறு நூல்கள், முனைவர் பட்ட ஆய்வேடுகள், ஆய்வு அறிக்கைகள் ஆகியவற்றை படைப்பாக்க பொதும உரிமங்களின் (Creative Commons CC by SA) கீழ் வெளியிடுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ2–2)த் துறை**

அரசாணை (நிலை) எண்.105 நாள் 1.7.2016,
துன்முகி, ஆனி – 17
திருவள்ளுவராண்டு – 2047

படிக்க:

1. இயக்குநர், தமிழ் இணையக் கல்விக் கழகம், சென்னை–25 அவர்களின் கடித நாள் 1.4.2016.
2. தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் (பொ) அவர்களின் கடித எண்.இ1/2938/ 2012, நாள் 9.4.2016.
3. தமிழ் வளர்ச்சி இயக்குநர் (பொ) அவர்களின் கடித எண் வ.செ.2/ 2989/ 2016, நாள் 28.4.2016.

*******

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், படைப்பாக்கப் பொதும உரிமம் (Creative Commons CC by SA) என்னும் அடிப்படையில், ஒரு படைப்பு பகிரப்பட்டால், அப்படைப்பு கல்வி, ஆய்வு நோக்கில் அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடையவும், எளிதில் பகிரப்படவும் வாய்ப்புகள் மிகுதியாக உள்ளன என்றும், தகவல் தொழில்நுட்பத் துறையின் சார்பில் 2015 மானியக் கோரிக்கையில் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் ஆக்கங்கள், படைப்பாக்கப் பொது உரிமையின் அடிப்படையில் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் இந்திய நடுவண் அரசும் படைப்பாக்கப் பொதுமங்கள் மற்றும் கட்டற்ற மென்பொருட்களை ஊக்குவித்து வருகின்றது என்றும் தமிழ் இணையக் கல்விக்கழகம், தமிழக அரசு நாட்டுடையமையாக்கப்பட்டுள்ள நூல்களைப் படைப்பாக்க பொதுக்கள உரிமத்தில் வெளியிட்டு அறிவித்துள்ளது என்றும் அதனால் விக்கி ஊடகத்தில் விக்கி மூலம் என்ற திட்டத்தில் தமிழ் உலக அளவில் முதல் 10 என்ற இடத்தில் உள்ளது என்றும் எனவே கடந்த நாற்பதாண்டுகளாக தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழ் சார்ந்து பல்வேறு நூல்களையும், முனைவர் பட்ட ஆய்வேடுகளையும், ஆய்வு அறிக்கைகளையும், திட்ட அறிக்கைகளையும் வெளியிட்டுள்ளது என்றும் இவற்றையெல்லாம் படைப்பாக்க உரிமம் என்னும் அடிப்படையில் மக்களுக்குக் கிடைக்கச் செய்தால், பொது மக்களும், மாணவர்களும், அறிஞர்களும் தமிழ்ப் பல்கலைக்கழக ஆக்கங்களை எளிதாகப் பயன்படுத்துவதற்கும், பகிரப் பெறுவதற்கும் வாய்ப்புகள் பெருகும் என்றும் எனவே, தமிழ்ப் பல்கலைக்கழகம் மேற்படி ஆவணங்களை படைப்பாக்கப் பொதுமம் என்னும் உரிமத்தின் கீழ் வெளியிட ஆணை வழங்குமாறு தமிழ் இணையக் கல்விக்கழக இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் திட்டங்கள் ஆய்வேடுகள் அனைத்தும் விரைவில் தமிழ்ப் பல்கலைக்கழக இணையதளத்தில் வெளியிட முயற்சி நடந்து வருகின்றது என்றும், அவற்றை தமிழ் இணையப் பல்கலைக்கழக

வலைதளத்தில் இணைப்பாக, அப்பணிகள் முடிந்ததும் இணைக்கப்படும் என்றும் பல்கலைக்கழக வலைதளத்தில் இதுவரை செய்யப்பட்ட ஆய்வுச் சுருக்கங்கள் விரைவில் வெளியிடப்படும் என்றும், அதனை இணைப்பாக இணையக்கழகம் வெளியிடலாம் என்றும் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் (பொறுப்பு) தெரிவித்துள்ளார்.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் (பொறுப்பு) தெரிவித்துள்ளவாறு பொருண்மைகளைப் பதிப்பித்த பின்னர் படைப்பாக்க பொதுமம் என்னும் உரிமத்தின்கீழ் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிடுவதற்கு மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ் வளர்ச்சி இயக்குநர் (பொறுப்பு) பரிந்துரைத்துள்ளார்.

4. அரசின் கவனமான பரிசீலனைக்கு பின்னர், தமிழ் இணையக் கல்விக்கழக இயக்குநர் அவர்களின் கோரிக்கையினை தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் (பொ) மற்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் (பொ) ஆகியோரின் பரிந்துரைகளின் அடிப்படையில் ஏற்று, கீழ்க்கண்டவாறு அரசால் ஆணையிடப்படுகிறது:–

அ. நவீன தொழில்நுட்ப யுகத்தில், அறிவுசார் படைப்புகள் உலகெங்கும் வாழும் தமிழரையும், மற்றவரையும் சென்று சேர்ந்திட இணைய வழிப் பதிப்பு இன்றியமையாததாக உள்ளதால், பின்வரும் இனங்கள் அனைத்தும் படைப்பாக்கப் பொதும உரிமத்தின் (Creative Commons CC by SA) கீழ் வெளியிடலாம்:–

I. நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள் / படைப்புகள்

II. தமிழ் வளர்ச்சித் துறை/ தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் இதர அரசுத் துறைகள் வெளியிடும் நூல்கள் மற்றும் படைப்புகள்

III. தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட இதர அரசுத் துறையினர் சேகரித்துள்ள அரிய நூல்கள், ஓலைச்சுவடிகள், கல்வெட்டுகள், ஒளிப்படங்கள் ஆகியவற்றின் மின்னுருவாக்கப் படிகள்

ஆ. தமிழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் நூல் வெளியீடுகளை பதிப்புரிமைச் சட்ட விதிகளுக்குட்பட்டு உடனுக்குடன் பல்கலைக்கழக இணைய தளத்தில் வெளியிடுதல் வேண்டும்.

இ. இதர அரசுத் துறையினர் சேகரித்துள்ள அரிய நூல்கள், ஓலைச்சுவடிகள், கல்வெட்டுகள், ஒளிப்படங்கள் ஆகியவற்றின் மின்னுருவாக்கப் படிகள் குறிப்பிட்ட ஒருவருக்கோ அல்லது தனியார் நிறுவனத்திற்கோ சொந்தமானால், அவர்களின் அனுமதியைப் பெற்று வெளியிடலாம்.

இவையனைத்தும் தமிழக அரசு/ தமிழ் வளர்ச்சித் துறை/ தமிழ்ப் பல்கலைக்கழகம்/ தமிழ் இணையக் கல்விக் கழக இணைய தளங்களில் உடனுக்குடன் வெளியிடுவதற்கு ஆணை வெளியிடப்படுதல் வேண்டும்.

5. இவ்வாணை சட்டத்துறையின் அலுவல் சார்பற்ற எண்.453/எஸ்/2016, நாள் 17.5.2016–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. வெங்கடேசன்,
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர் (பொ), தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
இயக்குநர், தமிழ் இணையக் கல்விக் கழகம், சென்னை–25
பதிவாளர் (பொ), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்–613 010.

நகல்:
தகவல் தொழில்நுட்பத் துறை, சென்னை–9.
சட்டத் துறை, சென்னை–9
செயலாளர் அவர்களின் தனிச் செயலர்,
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, சென்னை–9
இருப்புக்கோப்பு / உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

1/7/16
பிரிவு அலுவலர்
1/7/16